பொட்டப்பாளையம் கேஎல்என். பொறியியல் கல்லூரியில்

# தொழில் நுட்பத்திற்கான அபிவிருத்தி 2024" என்னும் தலைப்பில் சர்வதேச மாநாடு

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பொட்டப்பாளையம் கே.எல். என். பொறியியல் கல்லூரியில் தொழில் நுட்பத்திற்கான நிலையான அபிவிருத்தி 2024" என்னும் தலைப்பில் சர்வதேச மாநாடு கல்லூரியின் தலைவர் Er.கே. என்.கே. கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இதன் துவக்க விழாவில் முனைவர். நாகம்மை வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர். ஆர்.எம். சதீஸ்குமார் மாநாடு குறித்து தொகுப்புரை ஆற்றினார். முனைவர். உமாராணி சிறப்பு விருந்தினர் முனைவர். சாமுவேல் யுவாரிங்கு ஆய்வாளர் இணைய பாதுகாப்பு கத்தார் ஆகியோரை அறிமுகம் செய்தார். அதனைத்தொடர்ந்து145க்கும்மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள்மர்ப்பிக்கப்பட்டன. அதன் பின்னர் சிறப்பு விருந்தினர் இணையதள வாயிலாக கத்தாரிலிருந்து சிறப்புரை ஆற்றினார். அதில் அவர் தகவல் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் பற்றி இன்றைய மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய தகவல்களை பரிமாறினார். இதனைத் தொடர்ந்து கல்லூரியின் பொருளாளர் Er.கே.எஸ். டி.சிவபிரசாத், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும்கல்லூரியின்முதல்வர்முனைவர். அ.வெ. ராம்பிரசாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து முனைவர் டி. பிரதீப் கண்ணன் கௌரவ விருந்தினர் எஸ்.மகேஸ்வரன் மூத்த நிர்வாகி ஆப்மன் இந்தியா பிரைவேட் லிமிடெட் அவர்களை அறிமுகம் செய்தார். கௌரவ விருந்தினர் உரையில் பொறியியலின் நிலையான அபிவிருத்தி என்பது சமூக நலன் சார்ந்ததாகவும் மறுசுழற்சி முறையை நோக்கி இருக்க வேண்டும் என்று கூறினார்.




மேலும் மாநாட்டு நடவடிக்கைகள் பற்றிய புத்தகத்தை தலைவர். கே.என். கே. கார்த்திக் கௌரவ விருந்தினர் மகேஸ்வரனிடம்வழங்கினார்.விழாவின் நிறைவாக முனைவர். ஆ.எம். தன்சேகர் நன்றியுரை ஆற்றினார். இம்மாநாட்டில் கல்லூரி செயற்குழு உறுப்பினர்கள் உட்பட 35க்கும் மேற்பட்ட கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் 600 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று பயன் பெற்றனர் இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாகம்வெகுசிறப்பாகசெய்திருந்தனர்.